**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**LM00 ழகரம் (Lakaram)**

**இணையவழித் தேர்வு (Online Exam)**

**மாதிரி வினாத்தாள்**

**நேரம்: 30 மணித்துளிகள்** **மதிப்பெண்கள்: 25**

**பகுதி – அ**

**I. கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க. (5x1 = 5 )**

**(தஞ்சாவூர், வேழம், புறநானூறு, நன்னூல், செக்கச்செவேலெனச், வாடா மலர், பிளாட்டோ, உண்ணாமல், இங்கிலாந்து, வியப்பு)**

1. கவிஞர் ஷெல்லி பிறந்த நாடு __________________.
2. வாடாத மலர் – இத்தொடரின் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தொடர் ________ என்பதாகும்.
3. இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் தமிழ்நாட்டின் __________________ மாவட்டத்தில் பிறந்தார்.
4. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல் இடம்பெற்ற நூல் __________________.
5. 'மலைத்தேன்' என்னும் சொல் மலையில் கிடைக்கும் தேனையும் இன்னொரு பொருளையும் குறிக்கும். அந்த இன்னொரு பொருள் __________.
6. __________________ தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று.
7. செவ்வாழை ___________ சிவந்துள்ளது.
8. உலகப் புகழ்பெற்ற கிரேக்கத் தத்துவஞானி __________________.
9. 'யானை, களிறு, களபம் என்னும் சொற்களைக் குறிக்கும் வேறு சொல் ________
10. அலுவலகத்திற்கு நேரமானதால், அகிலன் _______ சென்றான்.

## பகுதி – ஆ

**II. சரியான விடையைத் தேர்வு செய்க.** **(5x1 = 5)**

1. தேர் வடிவத்திலுள்ள வள்ளுவர் கோட்டம் எவற்றால் இழுத்துச் செல்வதுபோல் உருவாக்கப்பட்டுள்ளது?

   அ) யானை ஆ) சிங்கம்

   இ) குதிரை ஈ) புலி

2. பெர்னாட்ஷாவிற்கு அதிகம் பிடிப்பது

   அ) விலங்குகள் ஆ) காய்கறிகள்

   இ) பறவைகள் ஈ) மலர்கள்

3. 'கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்' – எனத் தொடங்கும் திருக்குறளில் கண்ணிற்கு அணிகலனாகக் கூறப்படுவது

   அ) சினம் ஆ) மகிழ்ச்சி

   இ) இரக்கம் ஈ) துன்பம்

4. தென்னை மரமானது எந்தப் பகுதியில் நீரைப் பெற்றுக்கொண்டு இளநீரைத் தருகிறது?

   அ) நுனிப் ஆ) வேர்ப்

   இ) இலைப் ஈ) நடுப்

5. '... மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்' – என்ற பாடல் அடி எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

   அ) பதிற்றுப்பத்து ஆ) குறுந்தொகை

   இ) பரிபாடல் ஈ) நன்னூல்

## பகுதி – இ

**III. பொருத்துக.** **(5x1 = 5)**

| | | |
|---|---|---|
| 1. மழைத்துளி | – | Stationery |
| 2. அவசர கால ஊர்தி | – | Pesticide |
| 3. பூச்சிக்கொல்லி | – | Banner |
| 4. பதாகை | – | Raindrop |
| 5. எழுதுபொருள் | – | Ambulance |

**பகுதி – ஈ**

**IV. பின்வரும் வினாக்கள் சரியா? தவறா? எனத் தேர்வு செய்க. (5x1 = 5)**

1. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய மன்னன் இராஜேந்திர சோழன். (சரி/தவறு)
2. இந்தியாவில் முதல் அகழாய்வு கொற்கையில் நடத்தப்பட்டது. (சரி/தவறு)
3. நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று வில்லுப்பாட்டு. (சரி/தவறு)
4. 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்று கூறியவர் திருமூலர். (சரி/தவறு)
5. ஆபிரகாம் பண்டிதர் ஓவிய ஆசிரியராகப் பணி செய்தார். (சரி/தவறு)

#####

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**LM00 ழகரம் (Lakaram)**

**எழுத்துத் தேர்வு (Written Exam)**

**மாதிரி வினாத்தாள்**

**நேரம் : 3.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

**I. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**Read the passage and answer the questions that follows:** **(5x 1= 5)**

முதியவர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு இதயநோய் இருந்ததால், அதிர்ச்சி தரும் எந்தச் செய்தியையும் சொல்லக்கூடாது என மருத்துவர் கூறியிருந்தார். சில நாளுக்குப் பிறகு, முதியவரின் மகன் மருத்துவரைத் தேடி வந்தான். என் தந்தை வாங்கிய குலுக்கல் சீட்டில் முதற்பரிசு விழுந்திருக்கிறது. அவரிடம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை என்றான். மருத்துவர் தாம் பக்குவமாக எடுத்துக் கூறுவதாக உறுதி அளித்தார். மறுநாள் மருத்துவர், முதியவரிடம் உங்களுக்குக் குலுக்கல் சீட்டில் ஒரு கோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அந்த முதியவர் சிரித்துக்கொண்டே அந்தத் தொகையில் பாதித்தொகையை உங்களுக்குத் தந்துவிடுவேன் என்றார். இப்போது மயங்கி விழுந்தவர் அந்த முதியவர் அல்ல மருத்துவர். பாவம், அவரால் அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை.

**வினாக்கள்**

1. முதியவர் எந்த நோயால் துன்பப்பட்டார்?
2. முதியவரின் மகன் மருத்துவரிடம் கூறிய செய்தி யாது?
3. குலுக்கலில் கிடைத்த பரிசு என மருத்துவர் குறிப்பிட்ட தொகை யாது?
4. குலுக்கல் பரிசில் எவ்வளவு தொகையினை முதியவர் மருத்துவருக்குத் தருவதாகக் கூறினார்?
5. மருத்துவர் மயங்கி விழக் காரணம் என்ன?

## பகுதி ஆ
## மொழிபெயர்ப்புத் திறன்

**II.** **கீழ்க்காணும் தமிழ்ப் பத்தியினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்:–**
**Translate the following Tamil passage into English:** **(1x5=5)**

பாரி என்னும் மன்னன், வீரத்திலே சிறந்தவன்; பண்பிலே நிறைந்தவன்; எல்லாவற்றிற்கும் மேலாகக் கொடையிலே இணையற்றவன்; அவன் தன்னை நாடி வருபவர்களுக்கு உணவு தருவான்; உடை தருவான்; பொருள் தருவான்; ஓர் ஊர் முழுவதையும் புலவருக்கு அளித்து மனநிறைவு கொள்வான்.

**III.** **கீழ்க்காணும் ஆங்கிலப் பத்தியினைத் தமிழில் மொழிபெயர்க்கவும்:–**
**Translate the following English passage into Tamil:** **(1x5=5)**

Every past event becomes a memory in our mind. It is because of these memories we can think about the things that have taken place in the past. There are some moments in our life that we wish not to lose ever.

## பகுதி – இ
## இலக்கணப்பகுதி

**IV.** **கீழ்க்காணும் உரைப்பகுதியில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான இணைமொழிகள் கொண்டு நிரப்புக:–**
**Fill in the blanks with suitable Synonyms for the passage given below:** **(1x 5= 5)**

கமலா தனது தோட்டத்தில் ரோஜாச் செடிகள் ______ இருப்பதைப் பார்த்தாள். அச்செடிகளைக் ______ காப்பாற்ற எண்ணினாள். அதனால், அவள் ______ பாராமல் உரமிட்டு, நீர் பாய்ச்சிப் பாதுகாத்தாள். இதன் விளைவாகச் செடிகளிலுள்ள ரோஜாப் பூக்கள் ______ எனப் பூத்துக் குலுங்கின.

**V.** **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**Answer any Five questions** **(5 x 2= 10)**

1. பெயரெச்சம் என்றால் என்ன? "வாடாத மலர்" – இதனை ஈறு கெட்ட எதிர்மறை பெயரெச்ச வாக்கியமாக மாற்றவும்.
2. பாரதியார் ஓடி விளையாடு பாப்பா என்றார் – இவ்வாக்கியத்திற்குரிய நிறுத்தக்குறியினை இடுக.
3. வழுவமைதி வகைகள் எத்தனை? அவை யாவை?

4. கீழ்க்காணும் தொடர்களில் விடுபட்ட வல்லின மெய்களை மிகுத்து எழுதுக.
   அ) உயிர்ச்சத்து கிடைப்பதற்கு பாலை குடிக்க வேண்டும்.
   ஆ) இந்த புத்தகம் எனக்கு மிகவும் பிடிக்கும்.
5. புணர்ச்சி வகைகளைச் சான்றுடன் எழுதுக.
6. திணை எத்தனை வகைப்படும்? சான்று தருக.
7. தெரிநிலை வினையெச்சம் என்றால் என்ன? இரண்டு சொற்கள் சான்று தருக.
8. இரட்டுற மொழிதல் என்றால் என்ன? சான்று தருக.

### பகுதி – ஈ

### பாடப்பகுதி

**VI. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக:–**
**Answer all questions in a word /Sentence.** **(5 x 1=5)**

1. ஷெல்லி கவிதைகளின் மீது இருந்த ஆர்வத்தினால் பாரதியார் தனக்கு வைத்துக் கொண்ட புனைப்பெயர் என்ன?
2. பொருநை ஆறு தற்போது எந்த பெயரில் அழைக்கப்படுகிறது?
3. தொழிற்புரட்சி முதன்முதலில் எங்கு தோன்றியது?
4. மைக்ரோசாப்ட் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?
5. லுட்விக் வான் பீத்தோவன் எங்குப் பிறந்தார்?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக:–**
**Answer any Five questions in three lines each.** **(5 x 2= 10)**

1. காற்று எவ்வாறு மாசு அடைகிறது?
2. வில்லுப்பாட்டு என்றால் என்ன?
3. தொழிற்புரட்சியினால் விளைந்த நன்மைகள் யாவை?
4. உயிர் காக்கும் வங்கிகளின் பெயர்களை எழுதுக.
5. இயற்கை மொழி ஆய்வு என்றால் என்ன?
6. தொழில்நுட்பம் என்றால் என்ன?
7. தமிழரின் உயரிய சிந்தனை யாது?
8. சிறு வயதில் எடிசனுக்குக் கண்டுபிடிப்புகளின் மீது ஆர்வம் இருந்ததை விளக்குக.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:–**
***Answer any one of the following questions in essay format:*** **(1x 10 = 10)**

1. உறவின் மேன்மை குறித்து எழுதுக.
2. தமிழர் கட்டடக் கலை குறித்து விவரி?
3. செஞ்சிலுவை சங்கத்தின் நோக்கம் மற்றும் பணிகள் குறித்து கட்டுரை வரைக.

## பகுதி – உ
## செய்யுள் பகுதி

**IX. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:–**
**Answer any Five questions .** **(5 x 2= 10)**

1. கவிதை குறித்து கவிமணி பாடிய பாடலின் பொருளைத் தருக.
2. சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாக எவற்றைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
3. உன் பாடப்பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு திருக்குறளை எழுதுக.
4. நாலடியார் கூறும் நற்செயல் செய்ய வேண்டிய காலத்தினை விளக்குக.
5. "பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
   நன்மை கடலினும் பெரிது." – என்ற திருக்குறளின் பொருளை எழுதுக.
6. ஔவையார் கூறும் நல்வழியில் உதவிக் குறித்து கூறுபவற்றை சுருக்கி எழுதுக.
7. உதவி எதனைப் பொறுத்து அமையும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
8. மயிலைக் கண்டு எது பொறாமைக் கொண்டது என ஔவையார் பாடியுள்ளார் ?

## பகுதி – ஊ
## படைப்பாற்றல் பகுதி

**X. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:–**
*Write an essay any one of the following questions* **(1x 10= 10)**

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தினைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.



2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.
3. கைப்பேசியின் பயன்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

******